## கொரோனா வைரஸ் (கோவிட்-19):

# ஸ்காட்லாந்தின் செயல்திட்டக் கட்டமைப்பு புதுப்பிப்பு: பிப்ரவரி 2021

ஸ்காட்டிஷ் அரசாங்கம்
பிப்ரவரி 2021

தொகுப்பு

**23 பிப்ரவரி 2021 இன் படி இந்தத் தகவல் சரியானது மேலும் தகவல் அறிய [www.gov.scot/coronavirus](http://www.gov.scot/coronavirus) இணைப்பைக் கிளிக் செய்யவும்.**

முடிந்த வரை பலரும் வழக்கமான வாழ்க்கைக்குத் திரும்ப முயற்சிக்கும் அதே வேளையில வைரஸ் பாதிப்பைக் குறைத்து அங்கேயே நிறுத்தி வைப்பதே எங்கள் செயல் திட்டத்தின் நோக்கமாகும். இதை அடைவதற்கு எங்களிடம் ஆறு முக்கிய கருவிகள் உள்ளன:

- எங்கள் தடுப்பூசித் திட்டத்தை விரைவாக நடைமுறையில் அறிமுகம் செய்தல்
- சோதிப்பது மற்றும் பாதுகாப்பதை மிகுந்த பலன் தரும் முறையில் பயன்படுத்துவது
- வைரஸ் பரவலை மட்டுப்படுத்த விகிதாசாரப் பாதுகாப்பு நடவடிக்கைகளைப் (விதிகள் மற்றும் வழிகாட்டுதல்) பயன்படுத்துதல்
- வைரஸ் இறக்குமதி அபாயத்தை நிர்வகிக்க ஆற்றல் மிக்க நடவடிக்கைகள்
- பாதுகாப்பு நடவடிக்கைகளைக் கடைபிடிக்கப் பொது மக்கள், வணிகங்கள் மற்றும் நிறுவனங்களுக்குத் துணை நிற்பது
- நெருக்கடியின் பாதிப்புகளைத் தணிக்கக் கவனிப்பையும் , ஆதரவையும் வழங்குதல்

இந்த ஆறையும் ஒன்றாகப் பயன்படுத்த வேண்டியது அவசியம், மேலும் அவை திறம்படச் செயல்பட நம் அனைவரின் அர்ப்பணிப்பும் அவசியம்.

இந்த இணையற்ற காலங்களில் மக்களைப் பாதுகாப்பதும் ஆதரிப்பதும் ஸ்காட்டிஷ் அரசாங்கத்தின் கவனமாக இருந்து வருகிறது, அது தொடரும்.

உண்மையான வாழ்க்கை ஊதிய வரம்பை அதிகரிப்பதன் மூலமாகவும், மானியத்தைப் பெற மக்களுக்கு உதவும் பலன்களின் வரம்பை விரிவுபடுத்துவதன் மூலமாகவும் சுய-தனிமைப்படுத்தலுக்கான ஆதரவு மானியத்தைச் செலுத்துவதற்கான தகுதியை நாங்கள் விரிவுபடுத்துகிறோம். சிரமங்களை எதிர்கொள்ளும் வேலையில் உள்ள பிறருக்கு மானியம் வழங்க உள்ளூர் அதிகாரிகளுக்கு அதிகாரம் அளிப்போம்.

செயல் திட்டக் கட்டமைப்பின் வணிக நிதியம் இந்த நிதியாண்டைக் தாண்டியும் வணிகங்களுக்குத் தொடர்ந்து ஆதரவளிக்கும், மேலும் வணிகங்களுக்கான பரந்த ஆதரவை நாங்கள் தொடர்ந்து மதிப்பாய்வு செய்வோம். கிடைக்கக்கூடிய ஆதரவு குறித்த சமீபத்திய தகவல் மற்றும் புதுப்பிப்புகளை [findbusinesssupport.gov.scot](http://findbusinesssupport.gov.scot) இணையதளத்தில் காணலாம்.

தொற்றுநோய்க் காலம் முழுவதும், தனிநபர்கள், வணிகங்கள் மற்றும் அமைப்புகள் [FACTS](#) இன் பாதுகாப்பான ஸ்காட்லாந்துக்கான நடவடிக்கைகளைக் கருத்தில் கொள்வதன் முக்கியத்துவத்தை நாங்கள் தொடர்ந்து வலியுறுத்தியுள்ளோம் (மேலும் தகவலுக்கு இணைப்பைக் கிளிக் செய்யவும்).

பொதுவான பயணப் பகுதிக்கு வெளியில் இருந்து ஸ்காட்லாந்திற்கு வரும் மக்களுக்குச் சர்வதேசப் பயணம் மற்றும் தனிமைப்படுத்தலுக்கான கட்டுப்பாடுகளை நாங்கள் பலப்படுத்தியுள்ளோம்.

நாம் கையாளும் கொரோனா வைரஸின் புதிய வகைகள் ஒரு குறிப்பிடத்தக்க சவாலாக உள்ளன. குறிப்பாக, இப்போது ஆதிக்கம் செலுத்தும் B.1.1.7 மாறுபாட்டின் அதிகரித்த பரிமாற்றக்கன்மையால் R எண்ணை ஒன்றிற்குக் கீழ் நிறுத்தி வைத்து வைரஸை மட்டுப்படுத்துவதால் செயல்பாடுகள் மற்றும் அமைப்புகளைக் திறப்பது மேலும் கடினம். இதன் விளைவாகக், கடந்த கோடையில் இருந்ததை விடத் தற்போதைய ஊரடங்கு படிப்படியாகவும் எச்சரிக்கையாகவும் விலக்கப்படும் என்று நாங்கள் எதிர்பார்க்கிறோம்: அதே வைரஸைக் கையாளவில்லை என்ற யதார்த்தத்தை இது பிரதிபலிக்கிறது.

ஆரம்பத்தில் தேசிய அடிப்படையில் மற்றும் சரியான நேரத்தில் புவியியல் ரீதியாக மாறுபட்ட நிலைகளுக்குத் திரும்புவதன் மூலம், எங்கள் தொடக்ககால முன்னுரிமைகள் மற்றும் பரிந்துரைக்கப்பட்ட தளர்வுகளுக்கான வரிசைப்படுத்துதல்களைச் சுருக்கமாகத் தெரிவிப்பதன் மூலம், மக்கள், வணிகங்கள் மற்றும் பிற நிறுவனங்கள் இயல்பு நிலைக்கு நெருக்கமாகத் திரும்புவதற்கான பாதையைப் புரிந்து கொள்ள முடியும். கீழே கொடுக்கப்பட்டுள்ள படம் 1 , தொடர்ச்சியான நிலைகள் மூலம் நாம் எவ்வாறு தொடர விரும்புகிறோம் என்பதை விளக்குகிறது.

## படம் 1: செயல்திட்டக் கட்டமைப்பின் கட்டம்




இங்கே கிளிக் செய்க www.gov.scot/coronavirus கொரோனா வைரஸ் குறித்த புதுப்பிக்கப்பட்ட தகவல் மற்றும் வழிகாட்டுதலை நீங்கள் காண்பதை உறுதி செய்கிறது.

ஸ்காட்லாந்து அரசு எப்போதுமே கல்விக்கு முன்னுரிமை அளிப்போம் என்றும் ஆரம்பகாலக் கற்றல் மற்றும் குழந்தைப் பராமரிப்பு மற்றும் பள்ளிகளுக்குக் கட்டம் கட்டமாகத் திரும்புவோம் என்றும் தெளிவுபடுத்தியுள்ளது. அது ஏற்கனவே துவங்கிவிட்டது, மற்றும் மீண்டும் பள்ளியில் சென்று கற்பதற்கான அடுத்த கட்டம் மார்ச் 15 இல் நடைபெறும். அந்த நாளிலிருந்து - புதிய சான்றுகள் அல்லது புதிய சூழ்நிலைகள் மறுபரிசீலனை செய்யும்படிக் கட்டாயப்படுத்தாவிட்டால் - 4 முதல் 7 வரையிலான ஆரம்ப வகுப்புகளின் அனைத்துக் குழந்தைகளும் முழுநேர அடிப்படையில் பள்ளிக்குச் செல்வார்கள், மேலும் அனைத்துத் தொடக்கப் பள்ளிக் குழந்தைகளும் காலை உணவு மற்றும் முறைப்படுத்தப்பட்ட குழந்தைப் பராமரிப்பு மற்றும் பள்ளிக்குப் பிறகான கிளப்புகளுக்குத் திரும்ப முடியும்.

ஈஸ்டர் விடுமுறைக்குப் பிறகு அனைத்து மேல்நிலைப் பள்ளி மாணவர்களும் முழுநேர அடிப்படையில் பள்ளிக்குத் திரும்புவார்கள் என்ற தெளிவான எதிர்பார்ப்புடன், மார்ச் 15 முதல், அனைத்து உயர்நிலை மாணவர்களும் உயர்தரத் தொலைநிலைக் கற்றல் மற்றும் சில பள்ளியில் சென்று கற்றல் இரண்டையும் பெறுவார்கள்.

பள்ளிக்குத் திரும்புவதற்கான கட்டம் கட்டமான எங்களது உறுதியான அணுகுமுறை நிபுணர்களின் ஆலோசனையின் அடிப்படையில் உள்ளது. முடிந்தவரை பாதுகாப்பாக, முடிந்தவரை அதிகமான குழந்தைகளை பள்ளிக்கு அழைத்துச் செல்வதற்கான சிறந்த மற்றும் மிகவும் நிலையான நீடித்த வழி இதுவே ஆகும்.

தங்கியிருப்போருக்கும் அவர்களது உறவினர் மற்றும் நண்பர்களுக்குமான சந்திப்புக்காக, மார்ச் ஆரம்பம் முதல் ஆதரவு இல்லங்களைத் திறப்பது குறித்து அறிவித்துள்ளோம்.

இருப்பினும் , அதை அடைந்த பிறகு, ஆதரவு இல்ல வருகைகளையும் சேர்த்துத் திறப்பதால், மார்ச் மத்தியில் வரை வேறு எந்தக் கட்டுப்பாடுகளையும் தளர்த்துவது சாத்தியமில்லை. வெளியில் செல்லவதற்கான நியாயமான காரணங்கள் இல்லாவிட்டால் வீட்டிலேயே தங்கியிருக்கும் தற்போதைய கட்டுப்பாடுகள் ஏப்ரல் துவக்கம் வரை இருப்பது, அதிகமான இளையவர்கள் பள்ளிக்குத் திரும்பப் போதுமான இடமளிக்கும்.

தேதிகள் முன்னரே தீர்மானிக்கப்படாமல், சான்றுகள் மற்றும் தரவுகளின் அடிப்படையில் நேர மாற்றங்கள் முடிவு செய்யப்படும். மாற்றங்களின் தாக்கத்தை அறிய ஆய்வுகளுக்கு இடையில் போதுமான நேரத்தை ஒதுக்குவதும் முக்கியம் ஆகும்.

ஸ்காட்லாந்தில் பொது சுகாதாரத்திற்கு வைரஸால் குறிப்பிடத்தக்க அச்சுறுத்தல் இல்லாத வரை புவியியல் ரீதியாக மாறுபட்ட நிலை அணுகுமுறைக்குத் திரும்ப முடியுமென எதிர்பார்க்கிறோம். பரவலைத் தடுப்பதிலும் மற்றும் உடல் நலத்தைப் பாதுகாப்பதிலும் தடுப்பூசி அறிமுகம் மிகவும் முக்கியம் என்ற வகையில் , நமது தற்போதைய திட்டப்படி குறைந்தது ( தடுப்பூசி மற்றும் நோய்த்தடுப்புக்கான கூட்டுக் குழு ) 1 முதல்- 9 வரையிலான அனைத்து JCVI முன்னுரிமைக் குழுக்களுக்கும் தடுப்பூசி வழங்குவது, ஸ்காட்லாந்து முழுவதும் மாறுப்பட்ட நிலைகளுக்குத் திரும்புவதற்குப் பாதுகாப்பாக இருக்கும்.

## படம் 2 : திட்டமிட்ட கட்டுப்பாட்டுத் தளர்வுகள்




இந்த நடவடிக்கைகளை நாங்கள் எடுக்கும்போது, தொடர்ச்சியான சோதனை, தடுப்பூசியை அறிமுகம் செய்தல், எல்லை நடவடிக்கைகள் மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகளைக் கடைபிடிக்க உதவும் நபர்களுக்கும் வணிகங்களுக்குமான ஆதரவு முக்கியமானதாக இருக்கும். கொடிய வைரஸை மட்டுப்படுத்துவதற்கு இந்தக் கருவிகள் எவ்வளவு பயனுள்ளதாக இருக்கும் என்பதை உறுதிப்படுத்த நாங்கள் பாடுபடுவோம். நாம் அனைவரும் நம் பங்கைச் செய்தால் இது சிறப்பாகச் செயல்படும்.

இறுதியில் கோவிட்-19 முற்றிலுமாக மறைந்திருக்க வாய்ப்பில்லை என்றாலும், அது நமது அன்றாட வாழ்க்கையில் இடையூறு விளைவிப்பதை நிறுத்துகிறது, மேலும் இது பொது சுகாதாரத்திற்குக் கடுமையான அச்சுறுத்தலாகக் கருதப்படுவதில்லை. இருப்பினும், இந்த நிலையை அடைய, அதிகபட்ச் மட்டுப்படுத்தலுக்கான ஒரு செயல்திட்டம் அவசியம்.

ஸ்காட்லாந்தில் உள்ள அனைவருமே எப்போது மீண்டும் இயல்புநிலையை உணர்வார்கள் என்பதையும் "புதிய இயல்பு நிலை" எப்படி இருக்கும் என்பதையும் அறிய விரும்புகிறோம். வைரஸைச் சுற்றியுள்ள நிச்சயமற்ற தன்மையைக் கருத்தில் கொண்டு, இந்தக் கட்டத்தில் தீர்வுகளைப் பற்றி யாரும் முழுமையாக நம்ப முடியாது. ஆனால் எதிர்காலத்தைப் பார்க்கும்போது, கோவிட் உடன் தொடர்புடைய நோய்வாய்ப்படும் தன்மை மற்றும் இறப்பு இரண்டையும் தடுப்பூசித் திட்டம் கணிசமாகக் குறைக்கும் என்று நாங்கள் நம்புகிறோம், எதிர்பார்க்கிறோம். புதிய

சிகிச்சைகள் உருவாகி வருகின்றன, அவை தொடர்ந்து மேம்படுத்தப்பட்டு, கோவிட் இன் நேரடியான பாதிப்பை மேலும் குறைக்கும்.

காலப்போக்கில், இந்த நேர்மறையான முன்னேற்றங்கள் கோவிட் இனி ஸ்காட்லாந்தில் பொது சுகாதாரத்திற்ககடுமையான அச்சுறுத்தலை ஏற்படுத்தாது என்பதைக் குறிக்கிறது. இருப்பினும் இது ஒரு பொது சுகாதாரம் தொடர்பான கவலையாக நீடிக்கும் என்று தெரிகிறது: ஒரு சமூகமாக நாம் நிரந்தர அம்சமாகக் கோவிட் உடன் வாழ வேண்டியிருக்கும். சில பொது சுகாதார நடவடிக்கைகளை நாம் தயார் நிலையில் வைத்திருக்க வேண்டியிருந்தாலும், எதிர்காலத்தில் ஏற்படும் எதிர்பாரா அதிகரிப்பு குறித்து விழிப்புடன் இருக்க வேண்டியிருந்தாலும், பொதுவான கட்டுப்பாடுகளை நீக்குவதை எதிர்நோக்கலாம்.